முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## ஆற்றல் (திறன்கள்) CAPSTONE – 2015 யூலை

## (SS2) தகவல் தொழில்நுட்பத் திறன்கள் (IT SKILLS)

2015-07-26
பிற்பகல்
[3.30 – 5.30]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***நேரம்:*** *02 மணித்தியாலம்*

பக்கங்கள் : 12
வினாக்கள் : 07

(2) ***வினாத்தாள் கட்டமைப்பும் புள்ளிகள் ஒதுக்கீடும்:***

| பகுதி | தேவைப்பாடு | புள்ளிகள் |
|---|---|---|
| A | எல்லா வினாக்களும் கட்டாயமானவை | 40 |
| B | ஏழு வினாக்களில் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும். | 60 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

(3) *பரீட்சைக்கு விண்ணப்பித்த அதே* ***மொழியிலேயே விடைகள்*** *தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில்*** *எழுதப்படல் வேண்டும்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இலக்கங்கள்* ***1.1*** *முதல்* ***1.18*** *வரையுள்ள வினாக்களுக்குரிய மிகவும் சரியான விடையைத் தெரிந்து, தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை அதன் வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைத்தாளில் எழுதுக.*

**1.1** 7,589.60 பெறுமதியைக் கொண்ட கலமொன்று (cell) #,##0 ஆக வடிவமைக்கப்பட்டிருப்பின் அதே கலத்தில் காட்சிப்படுத்தப்பட்ட பெறுமதி:

(1) 7,589.00 (2) 7,589.60
(3) 7,600.00 (4) 7,590.00 (02 புள்ளிகள்)

**1.2** இணையத்தோடு தொடர்புடைய சேவைகள் மற்றும் உற்பத்திகளில் சிறப்புத் தேர்ச்சியடைகின்ற Google Inc. நிறுவனமானது, ஒரு பல்தேசிய கூட்டுத்தாபனமாகும். நிறுவனத்தால் வழங்கப்படும் இலவச வெப்தள அடிப்படை ஈமெயில் சேவை எப்பெயரால் அறியப்படுகின்றது?

(1) Gmail. (2) Hotmail.
(3) Yahoo. (4) Outlook. (02 புள்ளிகள்)

**1.3** ஒரு மின்னஞ்சல் (email) மென்பொருளில் அல்லது வலை அடிப்படை மின்னஞ்சல் (web-based email provider) வழங்குபவரில் முழுமையல்லாத இன்னமும் அனுப்ப வேண்டியுள்ள மின்னஞ்சல்கள் (emails) எதன் கீழ் காணப்படும்?

(1) Inbox. (2) Sent Mail.

(3) Spam Mail. (4) Drafts. (02 புள்ளிகள்)

**1.4** **உரு 1** மற்றும் **உரு 2** இல் உள்ள எழுத்துரையை (Text) கவனத்திற் கொள்க.




**உரு 1**




**உரு 2**

**உரு 1** இல் உள்ள நிலை உருமாற்றுவதற்கு (transform) தேவைப்படும் பண்புக்கூற்றை (feature) **உரு 2** க்கு மாற்றுதல் எதுவாக அறியப்படுகிறது?

(1) வீழ் தலைஎழுத்து (Drop Cap) (2) சிறிய தலையெழுத்து (Small Caps)

(3) எல்லா தலையெழுத்துகளும் (All Caps) (4) செருகு குறியீடு (Insert Symbol)

(02 புள்ளிகள்)

**1.5** இந்த மின்னஞ்சல் முகவரியைக் கவனிக்குக. “examinations@aatsl.lk”. இந்த மின்னஞ்சல் முகவரியில் “lk” என குறிப்பது:

(1) ஆள்களப் பெயர் (Domain name)

(2) பயனாளி பெயர் (User name)

(3) நாட்டுக் குறியீட்டு மேல்மட்ட ஆள்களம் (Country-code top-level domain)

(4) சேவையகப் பெயர் (Server name) (02 புள்ளிகள்)

**1.6** இணைய வங்கியியல் (Internet Banking) அல்லது தொடரறா நிலையில் (online) உங்கள் கடன் அட்டையைப் பயன்படுத்துதல் போன்ற செயற்பாட்டை ஆற்றுகிறபோது, உங்களது இரகசியத் தரவுகள் பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வலைமேலோட்டின் (web browser) முகவரிப் பட்டை (address bar) மீது கண்ணுக்குப் புலனாக வேண்டிய செம்மை நடப்பு வழக்கு (protocol) எது?

(1) https (2) http (3) ftp (4) ip (02 புள்ளிகள்)

**1.7** சர்வதேச தொடர்பாடல்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆற்றிட அனுமதிக்கின்றதால் இணையத்தினூடாக வீடியோ மாநாட்டை (conferencing) ஆற்றிடும் இயலுமையானது, பல நிறுவனங் களுக்கு நன்மையளித்துள்ளது. இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு மென்பொருளுக்கான உதாரணம்,

(1) ஸ்கைப் (Skype)
(2) அடோப் ப்ளாஷ் (Adobe Flash)
(3) மைக்ரோசொப்ற் விஷுவல் ஸ்ரூடியோ
(4) விண்டோஸ் மீடியா பிளேயர்

(02 புள்ளிகள்)

**1.8** முயற்சித்திட்ட வளங்கள் திட்டமிடல் முறைமை (Enterprise Resources Planning system) ஒன்றை விட, ஒரு செயற்படு தகவல் முறைமையைப் (functional Information system) பயன்படுத்துவதன் பிரதிகூல மொன்றை பின்வருவனவற்றுள் எது விபரிக்கின்றது?

(1) தொடர்புறு தரவுகள் (Related data), வேறுபட்ட செயற்படு தகவல் முறைமைகளிடையே பகிரப்படுவதில்லை.

(2) செயற்படு தகவல் முறைமைகளில் பயன்படுத்தப்பட்ட குறிமுறையாக்கம் (encryption) வெளியாட்களால் இலகுவாக அனுமதியின்றி உள்நுழைய (hacked) முடியும்.

(3) தரப்பட்ட நேரமொன்றில் செயற்படு தகவல் முறைமையைப் பயன்படுத்த முடியுமான பயனாளிகளின் எண்ணிக்கை குறைவாகும்.

(4) செயற்படு தகவல் முறைமையொன்றை அபிவிருத்தி செய்திட எடுத்துக் கொண்ட நேரம் மிக உயர்வானதாகும். (02 புள்ளிகள்)

**1.9** முயற்சித்திட்ட வளங்கள் திட்டமிடல் முறைமையொன்றிலிருந்து (ERP) கேட்கப்பட்ட இசைவுச் செயற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளும்போது IFRS என்பது எதைப் பிரதிநிதித்துவப்படுத்து கின்றது?

(1) Internal File Recovery System.

(2) International Financial Reporting Standards.

(3) Information Feedback Receiving System.

(4) Internal Financial Report System. (02 புள்ளிகள்)

**1.10** ஒரு சிறிய அளவு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கம்பனியொன்றின் கணக்காளராக உங்களைக் கருதிக் கொள்ளவும். பின்வரும் நடைமுறைகளில் / பயிற்சிகளில் ஒரு ஒழுக்க நெறி ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையாக கவனத்திலெடுக்கக் கூடியது எது?

(1) அலுவலகத்தில் புற வன்தட்டொன்றின் மீது (external hard disk) உங்களது தரவுகளை ஒரு காப்பு எடுத்தல் (taking a back up).

(2) MS Office DVD home இன் மூலப் பிரதியை உங்களது இல்ல தனியாள் கணினி (home PC) யில் ஒரு பிரதியெடுத்தல்

(3) ஊழியர்களின் சம்பள விபரங்களைக் களஞ்சியப்படுத்துகின்ற மைக்ரோசொப்ற் Excel கோப்புகளை கடவுச்சொல் பாதுகாக்கின்றது.

(4) உங்களது அலுவலக கணினிக்காக ஒரு புகுபதிகை கடவுச்சொல்லை (login password) பயன்படுத்துதல் (02 புள்ளிகள்)

**1.11** “Spamming” என்பது குறிப்பது,

(1) வேண்டப்படாத (unsolicited) மின்னஞ்சல்களை அனுப்புதல்

(2) மின்னஞ்சல்களின் பருமன், அவற்றின் இணைப்புகளுக்கேற்ப (attachment) ஒழுங்குபடுத்தல்

(3) மின்னஞ்சல்களை பாதுகாப்பாக அனுப்புதல்

(4) மற்றொரு கம்பனியின் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்துதல் (02 புள்ளிகள்)

**1.12** கணினி வலையமைப்பொன்றில் முறைமைத் தனிச் சுதந்திரத்தை (system privileges)ப் பேணுவதற்கான பொறுப்புடைய ஒரு நபரின் பதவி,

(1) ஒரு முறைமை நிர்வாகி (a Systems Administrator)

(2) ஒரு IT தொழில்நுட்பவியலாளர் (an IT Technician)

(3) ஒரு நிறைவேற்றுப் பணிப்பாளர் (an Executive Director)

(4) ஒரு முறைமை இயக்குபவர் (a System Operator) (02 புள்ளிகள்)

**1.13** அஞ்சலிடல் (mailing) பட்டியல் முகாமையாளர் (mailing list manager) பயன்படுத்தப்படுவது,

(1) நிறுவனம் ஒன்றில் ஊழியர்களுக்கான மின்னஞ்சல்களை உருவாக்குதல்

(2) நிறுவனம்சார் தொடர்பாடல் நோக்கங்களுக்காகவே மின்னஞ்சல் முகவரிகளின் முகாமையிடல் பட்டியல் பயன்படுத்தப்படுகின்றன.

(3) நிறுவனத்திற்கு பெறப்பட்ட ஜன்ங் மின்னஞ்சல்களை (junk emails) வடிகட்டுதல்

(4) நிறுவனத்தால் அனுப்பப்பட்டதும் பெறப்பட்டதுமான மின்னஞ்சல்களை கணினி வைரஸ்களுக்காக வருடிநிலையறிதல் (Scanning) (02 புள்ளிகள்)

**1.14** “திறந்த ஆதாரமூல மென்பொருள்” (open Source Software) என்பது பின்வரும் எதனுடன் தொடர்புடைய மென்பொருளாகும்.

(1) களஞ்சியங்களைத் திறக்கும்போது பயன்படுத்தல்

(2) அதனுடைய ஆதாரமூல குறிமுறையை (source code) ப் பகிர்ந்து கொள்ளல்

(3) இறுவட்டுகள் (CDs) மற்றும் DVD களில் மட்டும் விநியோகிக்கப்படல்

(4) முறைமை இயக்குபவர்களால் (system operators) பயன்படுத்தப்படுவது (02 புள்ளிகள்)

**1.15** ஒரு பெரிய நிறுவனத்திற்காக மென்பொருளொன்றைக் கொள்வனவு செய்தலைக் கவனத்தில் கொள்ளும்போது, முயற்சியாளர் அனுமதிப் பத்திரமொன்றை (Enterprise License) வைத்திருக்க வேண்டுமென்பது பரிந்துரைக்கப்பட்டுள்ளது. முயற்சியாளர் அனுமதிப் பத்திரத்தைப் பொறுத்த மட்டில் பின்வருவனவற்றுள் சரியானது எது?

(1) மென்பொருளைக் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம்

(2) மென்பொருளை விற்பனை செய்வதற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம்

(3) கட்டுப்பாடின்றி பல கம்பனிகளுக்கு விநியோகிக்கக்கூடியதான மென்பொருள் அனுமதிப் பத்திரம்

(4) தனியாள் கணினிகளோடு பெரிய கம்பனி ஒன்றுக்கு வெளியிடப்பட்ட மென்பொருள் அனுமதிப் பத்திரம் (02 புள்ளிகள்)

**1.16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **(a)** | பூகம்பங்கள் | **(b)** | வெள்ளப்பெருக்கு | **(c)** | குறும்பர் தாக்குதல்கள் |
| **(d)** | வேவு பார்த்தல் | **(e)** | சுனாமி | **(f)** | பயங்கரவாதம் |

மேற்கூறப்பட்டவைகளுள் இயற்கையல்லாத அனர்த்தங்களாகக் கருதப்படுபவை யாவை?

(1) **(a), (b), (c)** மட்டும். (2) **(b), (c), (d)** மட்டும்.

(3) **(c), (d), (f)** மட்டும். (4) மேலேயுள்ள யாவும்.

(02 புள்ளிகள்)

**1.17**

**(a)** குறிமுறையாக்கம் (Encryption) **(b)** காப்புகள் (Backups)

**(c)** பெறுவழிக் கட்டுப்பாடு (Access control) **(d)** கணக்காய்வு (Auditing)

தரவுத்தளம் ஒன்றில் (database) தகவல் காப்புக் கட்டுப்பாட்டை (information security control) முன்னேற்றுவதற்கு மேலேயுள்ள முறைகளுள் எது உதவி செய்யும்?

(1) **(a)** யும் **(b)** யும் மட்டும். (2) **(a)** யும் **(c)** யும் மட்டும்.

(3) **(b)** யும் **(c)** யும் மட்டும். (4) மேலேயுள்ள யாவும்.

(02 புள்ளிகள்)

**1.18** "VPN தொழில்நுட்பமானது சேய்மைப் பயனாளிகள் ஒரு தனியார் வலையமைப்பு / இணையத்துடன் தொடுப்பு ஏற்படுத்திட இயலுமாக்குவதற்கு முடியும்" - இந்தக் கூற்றில் VPN என்னும் குறுக்கம் குறித்துநிற்பது,

(1) Virus Protected Network. (2) Visible Private Network.

(3) Virtual Private Network. (4) Vital Protocol Network. (02 புள்ளிகள்)

*அடைப்புக்குள் தரப்பட்ட சொற்களைக் கொண்டு வினா இல. **1.19, 1.20** ஆகியவற்றின் வெற்றிடங்களை நிரப்பவும் தெரிவு செய்த விடையை உங்களது விடைப் புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.19** "அதிகாரமளிக்கப்பட்ட தொடர்பாடல்களை அனுமதிக்கிறபோது அதிகாரமளிக்கப்படாத பெறுவழி (access)யை தடுப்பதற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு கணினி முறைமைத் தொகுதியின் ஒரு பகுதியாக அல்லது இணையமாக இருப்பது ஒரு ......................... [குவியம்(Hub) / தீச்சுவர் (Firewall)] ஆகும்."

(02 புள்ளிகள்)

**1.20** "......................... [பங்குப்பொருள் (Shareware / சேர்பொருள் (Adware)] என்பது ஒரு இணைய வலைத்தளத்திலிருந்து தரவிறக்கமாக அடிக்கடி சமர்ப்பிக்கப்பட்ட ஒரு வகை மென்பொருள் ஆகும். அவை வரையறுக்கப்பட்ட தொழிற்பாட்டையுடையனவாக அல்லது மென்பொருள் பயன்படுத்தக்கூடிய தடவைகளின் எண்ணிக்கை போன்ற ஏனைய வரையறைகளைக் கொண்டனவாக இருக்கலாம். அவை உள்ளார்ந்த சக்தியுடைய பயனர்களுக்கு (Potential users), மென்பொருளின் முழு வடிவத்தை (full version) கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதனை முயன்று பார்த்திட ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றன".

(02 புள்ளிகள்)

*பகுதி A முடிவுற்றது*

# <u>பகுதி B</u>

ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

(மொத்தம் 60 புள்ளிகள்)

## வினா 02

ஒரு தயாரிப்புத் தொழில் நிறுவனத்தின் ஊழியர் பட்டியலிலிருந்து எடுக்கப்பட்டதொரு பெயர்ப்பு (extract) கீழே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

| ஊழியர் இல. | முதல் பெயர் | வேறு பெயர்கள் | பிறந்த திகதி | அடிப்படைச் சம்பளம் (ரூ.) | தேசிய அடையாள அட்டை | திணைக்களம் | தகுதி நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 0001 | சில்வா | கீதா | 1980.02.09 | 22,500.00 | 805400370V | நிதி | ஆம் |
| 0002 | சேனரட்ன | ஜேம்ஸ் | 1975.03.25 | 42,000.00 | 750852400V | உற்பத்தி | ஆம் |
| 0003 | யோகராஜன் | சீதா | 1988.09.07 | 25,000.00 | 887510400V | HRM | இல்லை |
| 0004 | ராஸிக் | பஸ்லி | 1992.06.29 | 50,000.00 | 921810450V | தகவல் தொழில்நுட்பம் | ஆம் |
| 0005 | ஆறுமுகம் | நெல்சன் | 1970.08.24 | 48,000.00 | 702371588V | நிதி | இல்லை |
| 0006 | பெரேரா | விஜயா | 1983.06.29 | 39,000.00 | 831812566V | தகவல் தொழில்நுட்பம் | ஆம் |
| 0007 | ஆணல்ட் | கெவின் | 1983.12.20 | 78,000.00 | 833551789V | உற்பத்தி | ஆம் |
| 0008 | அல்விஸ் | ஜகத் | 1986.05.19 | 58,000.00 | 861401235V | உற்பத்தி | ஆம் |

*“தகுதிநிலை” என மேலே உள்ளது ஊழியர் பதவி நிரந்தரமானதா, இல்லையா என்பதைக் குறிக்கிறது என்பதை கவனத்திற் கொள்க.*

(a) மேலேயுள்ள பிரதான களம் (key field) எனக் கவனத்திற் கொள்ளக்கூடிய மிகவும் பொருத்தமான களத்தை **தெரிவுசெய்து** உமது தெரிவுக்கான காரணத்தை **விளக்குக.**

(03 புள்ளிகள்)

(b) பின்வரும் ஒவ்வொன்றுக்குமான மிகவும் பொருத்தமான தரவு வகைகளை (Data type) இனங்காண்க. “X” எனக் குறுக்குக் கோடிட்ட கலங்கள் (cells) இனங்காணப்பட அவசியமில்லை.

| துறையின் பெயர் | தரவு வகை |
|---|---|
| ஊழியர் இலக்கம் | |
| முதற் பெயர் | X |
| வேறு பெயர்கள் | X |
| பிறந்த திகதி | |
| அடிப்படைச் சம்பளம் | |
| தேசிய அடையாள அட்டை இல. | |
| திணைக்களம் | |
| தகுதிநிலை | |

(06 புள்ளிகள்)

(c) தரவுப் பதிவுச் செயன்முறையை (data entry process) அதிக வினைத்திறனுடையதாக்குவதற்கு மேலே அட்டவணைக் கட்டமைப்பில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய முடியுமா என்பதை விளக்குக.

நிதி, உற்பத்தி, HRM மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய நான்கு திணைக்களங்கள் மட்டுமே கம்பனியில் உள்ளதை எடுகோளாகக் கொள்க. (03 புள்ளிகள்)

(d) தொடர்புநிலைத் தரவுத் தளமொன்றில் (relational database) உள்ள அட்டவணைத் தொடர்புகளின் மூன்று (03) வகைகளை இனங்காண்க. (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா இல. 03

(a) கோப்பினை இருமுறை அழுத்தும்போது தன்னியக்கமாக ஆரம்பிக்கின்ற ஒரு முன்வைப்பை (presentation) உருவாக்குவதற்கு மைக்ரோசொப்ற் பவர்பொயின்ரில் ஆற்றுவதற்குத் தேவையான செயற்பாடுகளின் பட்டியலை (list of actions)த் தயாரிக்குக. ஏற்கனவே *pptx.* கோப்பொன்றை எடுகோளாகக் கருதுக. (03 புள்ளிகள்)

(b) ஒரு புதிய முன்வைப்பை உருவாக்குகின்றபோது, ஸ்லைட் மாஸ்ரரால் ஆற்றப்படும் பணியினை **விளக்கி அதன் நன்மைகளையும் குறிப்பிடுக.**

நீங்கள் வேலை செய்கின்ற கம்பனியை அறிமுகப்படுத்துவதற்காக ஒரு மைக்ரோசொப்ற் பவர்பொயின்ரை நீங்கள் உருவாக்க வேண்டுமென்பதை எடுகோளாகக் கொள்க. (06 புள்ளிகள்)

(c) பவர்பொயின்ரைப் பயன்படுத்தி முன்வைப்புச் செய்யும்போது, படவில்லை பரிமாறுகைகள் (Slide Transitions) மற்றும் அசைவூட்டம் (Animation) ஆகியன இரு பயனுள்ள பண்புக் கூறுகளாக (features) உள்ளன. இவ்விரு பண்புக் கூறுகளையும் **வேறுபடுத்துக**. (06 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா இல. 04

AA1 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் ஆற்றுகையை (performance)ப் பகுப்பாய்வு செய்வதற்கு AAT சிறீலங்கா திட்டமிடுகிறது. மாணவர்களின் புள்ளிகளைப் பகுப்பாய்வு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட பணித்தாளின் (worksheet) பெயர்ப்பு கீழே தரப்பட்டுள்ளது:

| | A | B | C | D | E | F | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | **பாடத்தின் பெயர்** | | | | | |
| 2 | **சுட்டெண்** | **FAB** | **QMB** | **EBA** | **BLE** | **மொத்தப் புள்ளி** | |
| 3 | E1255 | 85 | 60 | 78 | 70 | | |
| 4 | E1258 | 90 | 50 | 67 | 0 | | |
| 5 | E1251 | 77 | 45 | 90 | 69 | | |
| 6 | E1267 | 55 | 0 | 45 | 59 | | |
| 7 | E1275 | 80 | 55 | 69 | 68 | | |
| 8 | E1280 | 79 | 60 | 75 | 57 | | |
| 9 | E1293 | 55 | 60 | 80 | 60 | | |
| 10 | | | | | | | |
| 11 | ஆகக்கூடிய புள்ளி | | | | | | |
| 12 | ஆகக் குறைந்த புள்ளி | | | | | | |
| 13 | சராசரிப் புள்ளி | | | | | | |

விரிதாள் ஒன்றில் (spreadsheet) பயன்படுத்தப்படும் பணிகள் மற்றும் வாய்ப்பாடுகளின் (functions & formulas) அறிவைப் பயன்படுத்தி,

(a) கலம் F3 யிலுள்ள நான்கு பாடங்களுக்கான மொத்தப் புள்ளியைக் கணிப்பிடுவதற்குப் பொருத்தமான ஒரு பணியை இனங்காண்க. *(குறிப்பு : நீங்கள் ஒரு தனி பணியினைப் பயன்படுத்த வேண்டும்).* (02 புள்ளிகள்)

(b) கலம் B11 இல் பத்திரம் FBA இற்காக அடையப்பெற்றுள்ள ஆகக்கூடிய புள்ளியைக் கணிப்பிட பொருத்தமான ஒரு பணியை இனங்காண்க. *(குறிப்பு : நீங்கள் ஒரு தனி பணியைப் பயன்படுத்த வேண்டும்).* (02 புள்ளிகள்)

(c) கலம் C12 இல் பத்திரம் QMB இற்காக பெற்றுள்ள ஆகக்குறைந்த புள்ளியைக் கணிப்பிட பொருத்தமான ஒரு பணியை இனங்காண்க. *(குறிப்பு : நீங்கள் ஒரு தனி பணியைப் பயன்படுத்த வேண்டும்).* (02 புள்ளிகள்)

(d) கலம் D13 இல் பத்திரம் EBA இற்காக பெற்றுள்ள சராசரி புள்ளியைக் கணிப்பிட பொருத்தமானதொரு பணியை இனங்காண்க. *(குறிப்பு : நீங்கள் ஒரு தனி பணியைப் பயன்படுத்த வேண்டும்).* (02 புள்ளிகள்)

(e) சுட்டெண் இல. E1267 ஐக் கொண்ட மாணவன் பத்திரம் QMB இற்கு தோற்றாதிருக்க பிழையாக அவருக்கு பூச்சியம் புள்ளி தரப்பட்டுள்ளது. கலம் C13 இல் பத்திரம் QMB இற்காக பெற்றுள்ள சராசரி புள்ளியைக் கணிப்பிட பொருத்தமான பணியை இனங்காண்க. *(குறிப்பு : நீங்கள் ஒரு தனி பணியைப் பயன்படுத்த வேண்டும்).* (03 புள்ளிகள்)

(f) பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளின் ஏறுமுக வரிசையில் இந்த சுட்டெண்களை ஒழுங்கு படுத்துவதில் சம்பந்தப்பட்டுள்ள படிமுறைகளை இனங்காண்க. ஒவ்வொரு மாணவனின் மொத்தப் புள்ளியை நீங்கள் ஏற்கனவே பெற்றுள்ளதாக எடுகோள் கொள்ளலாம். (04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா இல. 05

இலங்கையில் ஒரு கிளையுடன் உள்ள ஒரு சர்வதேச வங்கியான **Golden Sun Bank** இல் உங்களது நிதிசார் முதலீட்டுப் பட்டியல் கோப்பினை (portfolio) நீங்கள் பேணி வருவதாக எடுகோள் கொள்ளவும். வங்கியானது உங்களது எல்லா நிதிகளையும் நீங்கள் அடையக்கூடியதான பெறுவழி (access) கொண்டதொரு சர்வதேச வங்கியியல் தலைவாயிலை (portal) உங்களுக்கு வழங்கியது. அதனூடாக நீங்கள் ஏனைய வங்கிகளுடன் நிதிய பரிமாற்றங்களை (fund transfers) ஆற்ற முடியும். வங்கியானது மேலும் ஒரு சர்வதேச செல்லுபடியுடைய (internationally) கடன் அட்டையையும் உங்களுக்கு வழங்கியது.

(a) பாரம்பரிய வங்கியியல் வசதிகளுடன் ஒப்பிட்டு, சர்வதேச வங்கியியல் வசதிகளைப் பயன்படுத்துவதிலுள்ள அனுகூலங்கள் மூன்றினை (03)ப் பட்டியல்படுத்துக. (03 புள்ளிகள்)

(b) அண்மையில் **Golden Sun Bank** இடமிருந்து, தமக்கு காப்புத் தகர்ப்பு (security breach) ஏற்பட்டுள்ளதால் உங்களது இணைய வங்கியியல் கடவுச்சொல்லை மாற்றும்படி கோரி மின்னஞ்சல் ஒன்று கிடைக்கின்றது. இக்கொள்பணியை ஆற்றுவதற்காக, வலைப் பக்கமொன்றுக்கு மீஇணை (hyperlink) யொன்றையும் அந்த மின்னஞ்சல் வழங்குகிறது.

கடவுச்சொல்லை மாற்றுவதற்கு நீங்கள் தீர்மானிப்பதற்கு முன்பு நீங்கள் எடுக்கும் ஏதேனும் முன்னெச்சரிக்கைகளைக் **கலந்துரையாடுக.** (06 புள்ளிகள்)

(c) உங்களது கடன் அட்டையைப் பயன்படுத்தி ஒரு சர்வதேச புத்தகக் களஞ்சியத்திலிருந்து புத்தகமொன்றைக் கொள்வனவு செய்யும்போது, நீங்கள் வழங்கத் தேவைப்படுகின்றதும் உங்களது கடன் அட்டைக்கு உரித்தானதுமான தரவு உருப்படிகள் மூன்றினை (03)க் **குறிப்பிடுக**. (03 புள்ளிகள்)

(d) இணையத்தினூடாக பொருட்களைக் கொள்வனவு செய்வதன் நன்மைகள் மூன்றினை (03)க் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா இல. 06

**திரு. ஜோன் செபஸ்ரியன்** (john@lankajintea.lk) என்பவர் **Lankajin Tea Exporters (Pvt) Ltd.** இன் கணக்காளர் ஆவார். அவருக்கு நியூடெல்லியிலுள்ள **Indian Tea Importers Co.** வின் கொள்வனவு அதிகாரியான **திரு. விராட்சிங்** (vsingh@indiatea.in) என்பவருக்கு மின்னஞ்சல் ஒன்றை (செய்தியை கீழே பார்க்கவும்) அனுப்ப வேண்டியிருக்கிறது.

**Lankajin Tea Exporters** இன் முகாமைப் பணிப்பாளரான **திரு. கமால் பெரேரா**, இந்த மின்னஞ்சலின் பிரதியொன்றை, **Indian Tea Importers Co.** யின் முகாமைப் பணிப்பாளரான **திரு. நரேந்திர கோபி** (ng@indiantea.in) க்கு INVOICE20150201A.docx. எனும் கோப்புடன் அவரது தகவலுக்காக அனுப்ப வேண்டுமென பரிந்துரைத்துள்ளார். இம்மின்னஞ்சலின் பிரதியொன்றை தமக்கும் கிடைக்கும்படி செய்யுமாறு **திரு. கமால் பெரேரா** மேலும் அறிவுறுத்தியுள்ளார். ஆனால் அவரது மின்னஞ்சல் முகவரி (md@lankajintea.lk) அனுப்புனரைத் தவிர்ந்த வேறு எவருக்கும் தெரியமாட்டாது.

**திரு. ஜோன் செபஸ்ரியனின்** வகிபாகத்தில் நீங்கள் பணியாற்ற வேண்டியுள்ளதாகவும் நீங்கள் புதிய மின்னஞ்சல் மென்பொருளைப் பயன்படுத்துவதாகவும் கருதுகோள் கொள்ளவும்.

உங்களுக்கு மேலதிகமாக கீழேயுள்ள தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) **Lankajin Tea Exporters (Pvt) Ltd.** இன் முகவரி: இல. 100, திமிபிரிகஸ்யாய வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி / தொலைநகல் : +94-11-2339449

(2) **Indian Tea Importers Co.** இன் முகவரி : இல. 34, ஹை ஸ்ரீட், நியூடெல்லி, இந்தியா.
தொலைபேசி / தொலைநகல் : +91-1029 2993 23

**(a)** இலக்கம் 1 – 8 வரை அடையாளமிடப்பட்ட பெட்டிகளுக்கான பொருத்தமான விடயத்தை (text) இனங்காண்கிறதன் மூலமாக, மேலேயுள்ள தகவல்களைத் தொடர்பாடல் செய்வதற்கு, மின்னஞ்சல்கள் அனுப்புதல் மீதான உங்களது அறிவைப் பிரயோகிக்குக. உங்களது விடையுடன் ஒவ்வொரு பெட்டியினதும் இலக்கத்தையும் உங்களது விடைப் புத்தகத்தில் எழுதுக.

| | |
|---|---|
| To: | ----------------------- *(1)* --------------------------- |
| CC: | ----------------------- *(2)* --------------------------- |
| BCC: | ----------------------- *(3)* --------------------------- |
| Subject: | ----------------------- *(4)* --------------------------- |

அன்பான திரு ----------------------- *(5)* ---------------------------

இக்கடிதம் 2015 பெப்ருவரி 1 ஆம் திகதியன்று உங்களது கொள்வனவுகளிலிருந்து பாக்கியாகவுள்ள வசூல்பண்ணப்படாத கொடுப்பனவுகள் மீதான விடயம் பற்றிய எனது 2015.03.17 மற்றும் 2015.03.20 திகதியிடப்பட்ட இரண்டு மின்னஞ்சல்கள் தொடர்பானது. (தொடர்பு விலைப்பட்டியல் இல. 20150201A இணைக்கப்பட்டுள்ளது). எனது இவ்விரண்டு மின்னஞ்சல்களுக்கும் உங்களிடமிருந்து எந்த ஒரு பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை என்பதை கவலையுடன் அறியத்தருகின்றேன். உங்களது கவனத்திற்காக மூல விலைப்பட்டியலை (original invoice) இத்துடன் மீள் இணைப்பு செய்கிறேன். தயவுசெய்து எல்லா பாக்கிகளையும் 2015 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்குத் தீர்க்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். இதை செய்யத் தவறும் பட்சத்தில் உங்களுடனான எங்களது ஒப்பந்தத்தை உடனடியாக முடிவுறுத்தவேண்டி (termination) யேற்படும்.

நன்றி,
உங்கள் உண்மையுள்ள,

----------------------- *(6)* ---------------------------

| | |
|---|---|
| ஒப்பம் | ----------------------- *(7)* --------------------------- |
| இணைப்பு | ----------------------- *(8)* --------------------------- |

(12 புள்ளிகள்)

**(b)** பாரம்பரிய அஞ்சல்களோடு ஒப்பிட்டு, மின்னஞ்சல்களைப் பயன்படுத்துவதிலுள்ள நன்மைகள் மூன்றினை (03)க் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா இல. 07

சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றை (Word Processing Software)ப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டதொரு விலைப்பட்டியல் (Invoice) ஒன்றை கீழ்வரும் படிமம் (image) காட்சிப்படுத்துகிறது.



**LankaJin Tea Exporters** **INVOICE**

No. 540, Thimbirigasyaya Road,
Narahenpita, Colombo 05,
Sri Lanka
Phone +94 112 559669
Fax +94 112 559669

INVOICE #20150201A
DATE: 1ST FEBRUARY 2015APRIL 16, 2015

TO:
Virat Singh
Indian Tea Importers Co.
Reliance Building
No. 34, High Street New Delhi
India
+91 1029 2993 23

SHIP TO:
Virat Singh
Indian Tea Importers Co.
Reliance Building
No. 34, High Street New Delhi
India
+91 1029 2993 23

| SALESPERSON | P.O. NUMBER | REQUISITIONER | SHIPPED VIA |
|---|---|---|---|
| Suresh Perera | 12501 | Virat Singh | Colombo |

| QUANTITY | DESCRIPTION | UNIT PRICE | TOTAL |
|---|---|---|---|
| 1000 Kg | BOP Tea (Dimbulla) Grade B | USD 1.50 | USD 1500 |
| | | SUBTOTAL | USD 1500 |
| | | SALES TAX | USD150 |
| | | SHIPPING & HANDLING | USD500 |
| | | TOTAL DUE | USD2150 |

Payment Instructions

**Make all payments via our PayPal account (electronic transfer)[1] to**
Payment is due within 30 days.
If you have any questions concerning this invoice, contact John Sebastian, Accountant on

Thank you for your business!

[1] If you are unable to transfer using PayPal, we can provide our International Banking Account

அம்புக்குறிகளால் அடையாளம் காட்டப்பட்ட (a) இலிருந்து (g) வரையான கொள்பணிகளை பூரணப்படுத்திட நீங்கள் பயன்படுத்தும் சொல்முறை வழிப்படுத்தல் பண்புக்கூறுகளை (word processing features) விளக்குக. எழுத்து அளவு (font size) அல்லது எழுத்துரு முகம் (font face) மாற்றங்களை நீங்கள் குறிப்பிடத் தேவையில்லை.

உங்களுடைய மென்பொருளாக நீங்கள் மைக்ரோசொப்ற் ஐப் பயன்படுத்துகிறதாக கருதிக் கொள்ளவும். இக்கொள்பணிக்காக நீங்கள் பயன்படுத்த கணினியின் வன்வட்டின் மீது ஒரு தேநீர்க் கோப்பை படிமக் கோப்பு (a tea cup image file) அங்கு உள்ளதாகக் கருதிக் கொள்க.

***உதாரணம் :***

ஆவணத்தின் மீது தேநீர் கோப்பை வரைவியலை (graphic) பெறுவதற்கு, (படிமத்தில் “a” அடையாளமிட்ட அம்புக்கு தொடர்புபடுத்துக.):

**Insert -> Picture என்பதைப் பயன்படுத்தி வன்வட்டு மீது தேநீர்க் கோப்பை படிமத்தை செருகவும் (insert). உருவிலுள்ளவாறு எழுத்துக்களின் மேல் படிமத்தை நிலைப்படுத்துக (position).**

(a) திரையின் மீது நிலைப்படுத்தப்பட்டுள்ளவாறு (as positioned) “To” மற்றும் “Ship To” லேபல்களைப் பெறுவதற்கு (படிமத்தின் “b” அடையாளமிடப்பட்ட அம்புக்குறிக்கு தொடர்பு படுத்துக). (02 புள்ளிகள்)

(b) ஆவணத்தின் வலதுகை பக்கத்தின் மீது விலைப்பட்டியல் இலக்கம் மற்றும் திகதியைப் பெறுவதற்கு (படிமத்தில் “c” என அடையாளமிடப்பட்ட அம்புக்குறிக்கு தொடர்புபடுத்துக). (02 புள்ளிகள்)

(c) மற்ற எழுத்துக்களின் கீழ் ஆவணத்தின் மீது தரப்பட்டுள்ளவாறு தோன்றும் “CONFIDENTIAL” /இரகசியமானது என்னும் சொல்லை உருவாக்குவதற்கு (படிமத்தில் “d” என அடையாளமிடப்பட்ட அம்புக்குறிக்கு தொடர்புபடுத்துக.). (02 புள்ளிகள்)

(d) QUANTITY, DESCRIPTION, UNIT PRICE மற்றும் TOTAL ஆகிய பெட்டியடைக்கப்பட்ட பிரதேசத்தைப் பெறுவதற்கு (படிமத்தில் “e” என அடையாளமிடப்பட்ட அம்புக்குறிக்கு தொடர்புபடுத்துக). (02 புள்ளிகள்)

(e) கொடுப்பனவு அறிவுறுத்தல்களை (Payment Instructions) நிலைக்குத்தாக தோன்றுமாறு பெறுவதற்கு (படிமத்தில் “f” என அடையாளமிடப்பட்ட அம்புக்குறிக்கு தொடர்புபடுத்துக). (02 புள்ளிகள்)

(f) இலத்திரனியல் இடமாற்றத்திற்கு (Electronic Transfer) மேலேயும், பிறகும் தோன்றும் “[1]” எனும் எழுத்தைப் பெறுவதற்கும் பக்கத்தின் அடியில் இணைக்கப்பட்டதொரு எழுத்தைக் கொண்டு செல்வதற்கும் (படிமத்தில் “g” என அடையாளமிடப்பட்ட அம்புக்குறிக்கு தொடர்புபடுத்துக). (03 புள்ளிகள்)

(g) கொடுப்பனவு அறிவுறுத்தல்களை முனைப்புறுத்துகின்ற (highlights) சாம்பல் நிறப் பெட்டியொன்றைப் பெறுவதற்கு (படிவத்தில் “h” என அடையாளமிடப்பட்ட அம்புக்குறிக்கு தொடர்புபடுத்துக). (02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

*பகுதி B முடிந்தது*